# பிரிவு 3 நோயாளிகளுக்கான மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை

(மன நலச் சட்டம் 1983ன் பிரிவு 17A)

| | |
|---|---|
| 1. நோயாளியின் பெயர் | |
| 2. உங்கள் பராமரிப்பிற்கு பொறுப்பேற்றுள்ள நபரின் பெயர் (உங்களுக்கு “பொறுப்பாக உள்ள மருத்துவர்”) | |
| 3. உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை தொடங்கும் தேதி | |

## நான் ஏன் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையில் இருக்கிறேன்?

மன நலச் சட்டம் 1983ன் பிரிவு 17A-ன் கீழ் நீங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையில் உள்ளீர்கள், ஏனெனில், நீங்கள் மருத்துவமனையைவிட்டு வெளியேறக்கூடிய அளவிற்கு நலமாக இருந்தாலும், உங்கள் சிகிச்சையை நீங்கள் தொடர்ந்து பெறாமல் போகலாம், அல்லது கூடுதல் சிகிச்சைக்காக அதிக கால அவகாசம் இல்லாத நிலையில் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டியிருக்கலாம் என்ற கவலை உங்கள் பராமரிப்பிற்கு பொறுப்பேற்றுள்ள நபருக்கு (உங்களுக்கு பொறுப்பாக உள்ள மருத்துவர்) உள்ளது.

மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை என்பது, நீங்கள் மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்டபின் நலமாக இருப்பதற்கு உதவும் பொருட்டு, தங்களால் இயன்ற அளவிற்கு உங்கள் பராமரிப்புக் குழு செயல்படுவதைக் குறிக்கிறது. ஆனால், உங்களுக்கு மீண்டும் மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட வேண்டும் என்று உங்களுக்காகப் பொறுப்பேற்றுள்ள மருத்துவர் கருதுவாரானால், உங்களுக்குத் தேவைப்படும் சிகிச்சையைப் பெறுவதற்காக மீண்டும் மருத்துவமனைக்குத் திரும்ப வரும்படி உங்களிடம் கூறப்படும்.

உங்களுக்கு பொறுப்பாக உள்ள மருத்துவர், நீங்கள் மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்டபின் உங்கள் மனநல குறைபாட்டிற்காக உங்களுக்குத் தேவைப்படும் சிகிச்சை மற்றும் பராமரிப்பிற்கான ஏற்பாடுகள் பற்றி உங்களிடம் பேசுவார்.

## சமுதாய சிகிச்சைக்கான உத்தரவு என்றால் என்ன?

சமுதாய சிகிச்சைக்கான உத்தரவு என்பது, நீங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையைப் பெற வேண்டும் என்பதைத் தெரிவிப்பதற்காக, உங்களுக்கு பொறுப்பாக உள்ள மருத்துவர் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட மனநல நிபுணர் ஒருவர் நிரப்ப வேண்டிய ஒரு படிவமாகும்.

ஒப்புதலளிக்கப்பட்ட மனநல நிபுணர் என்பவர், மன நலச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட நபர்களை மருத்துவமனையில் வைத்திருக்க வேண்டுமா என்பதை முடிவு செய்வதற்கு உதவுவதற்காக சிறப்புப் பயிற்சி பெற்ற ஒரு நபராவார்.

## நான் மருத்துவமனையைவிட்டு வெளியேறியபின் என்ன நடக்கும்?

உங்களுக்கு பொறுப்பாக உள்ள மருத்துவர், மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையில் என்ன நடக்கும் என்பதைப் பற்றி உங்களிடம் பேசுவார்.

உங்கள் சிகிச்சைக்கான சில ஏற்பாடுகளை நீங்கள் தொடர்வதற்கோ, அல்லது நீங்கள் சமுதாயத்தில் பாதுகாப்பாக வாழ்வதற்கும் மற்றும் நலமுடன் இருப்பதற்கும் உதவக்கூடிய வேறு ஏற்பாடுகளை பின்பற்றுவதற்கோ நீங்கள் கேட்டுக் கொள்ளப்படலாம். இவை "விதிமுறைகள்" என்று அழைக்கப்படுவதுடன், மன நலச சட்டத்தின் 17B-ன் கீழ் இவை அனுமதிக்கப்படுகின்றன.

இந்த விதிமுறைகள் பொருத்தமானவையாக இருப்பதாக உங்களுக்கு பொறுப்பாக உள்ள மருத்துவர் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட மனநல நிபுணர் ஒப்புக்கொள்ள வேண்டும் மற்றும் அவற்றை பின்பற்றுவதற்காக உங்களுக்குத் தேவைப்படும் எந்தவொரு உதவிக்கும் அவர்கள் ஏற்பாடு செய்வார்கள். நீங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை பெறும்போது, உங்களிடம் செய்யும்படியோ, அல்லது செய்யக்கூடாது என்றோ கூறப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விஷயம் குறித்து ஏதேனும் ஒரு காரணத்திற்காக உங்களுக்கு கவலை ஏற்பட்டால், உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவருடன் நீங்கள் பேச வேண்டும்.

## நான் விதிமுறைகளைப் பின்பற்றாவிட்டால் என்ன நடக்கும்?

ஒரு விதிமுறையை நீங்கள் பின்பற்றாவிட்டால், சிகிச்சைக்காக நீங்கள் மீண்டும் மருத்துவமனைக்கு வரவேண்டியிருக்குமா என்பதை உங்கள் பராமரிப்புக் குழுவானது தீர்மானிக்க வேண்டும்.

உங்களுக்குத் தேவைப்படும் சிகிச்சையை நீங்கள் பெறுவதை உறுதி செய்வதற்கு அதுதான் ஒரே வழி என்று உங்களுக்குப் பொறுப்பேற்றுள்ள மருத்துவர் கருதுவாரானால், நீங்கள் மருத்துவ மனைக்குத் திரும்ப வரும்படி கூறப்படலாம். நீங்கள் எல்லா விதிமுறைகளையும் பின்பற்றினாலும்கூட சில சமயங்களில் இதற்கு அவசியம் ஏற்படக்கூடும். இது, மருத்துவமனைக்கு "திரும்ப அழைக்கப்படுதல்" என்று குறிப்பிடப்படுகிறது.

உங்களுக்கு பொறுப்பாக உள்ள மருத்துவர், நீங்கள் மருத்துவமனைக்கு திரும்ப அழைக்கப்பட வேண்டும் என்று கருதினால், நீங்கள் மருத்துவமனைக்கு உடனடியாக வரவேண்டுமா அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வரவேண்டுமா என்பதை உங்களுக்கு பொறுப்பாக உள்ள மருத்துவர், எழுத்துமூலமாக உங்களுக்குத் தெரிவிப்பார். நீங்கள் வரவேண்டும் என்று கூறப்படும்போது நீங்கள் வராவிட்டால், உங்கள் விருப்பத்திற்கு மாறாக நீங்கள் மருத்துவமனைக்கு அழைத்து வரப்படக்கூடும்.

நீங்கள் மருத்துவமனைக்கு திரும்ப அழைக்கப்பட்டால், அங்கு 72 மணி நேரத்திற்கு நீங்கள் வைக்கப்படலாம். இன்னும் நீண்ட நேரத்திற்கு நீங்கள் மருத்துவமனையில் வைக்கப்பட வேண்டும் என்று உங்களுக்கு பொறுப்பாக உள்ள மருத்துவர் கருதினால், ஓர் ஒப்புதலளிக்கப்பட்ட மனநல நிபுணர் உங்களிடம் பேசும்படி கேட்டுக்கொள்ளப்படுவார். அந்த நேரத்தில் இது உங்களுக்கு விளக்கிக் கூறப்படும்.

## மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையில் நான் இருக்கும்போது எனக்கு என்ன சிகிச்சை தேவைப்படும்?

உங்களுக்கு பொறுப்பாக உள்ள மருத்துவர், உங்களுக்கு தேவைப்படும் சிகிச்சைகளைப் பற்றி உங்களுடன் கலந்தாலோசிப்பதுடன், சமுதாயத்தில் நீங்கள் எப்போது மற்றும் எப்படி சிகிச்சையளிக்கப் படுவீர்கள் என்பதையும் நிர்ணயிப்பார்.

## சிகிச்சை பெறுவதற்கு நான் மறுப்பு தெரிவிக்கலாமா?

உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் சிகிச்சைக்கு மறுப்பு தெரிவிப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு, ஆனால், உங்களை மருத்துவமனைக்கு திரும்ப அழைத்து, உங்களுக்கு பொறுப்பாக உள்ள மருத்துவரால் இது முடிவு செய்யப்பட வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சையில் உங்களுக்கு விருப்பமில்லையென்றால், உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவருடன் இயன்றவரையில் விரைவாக நீங்கள் பேச வேண்டும்.

## எனது சிகிச்சைக்கு ஒப்புக்கொள்ளலாமா என்பதை முடிவு செய்ய முடியாத அளவிற்கு என் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தால் என்ன நடக்கும்?

சிகிச்சையை பெறலாமா என்று நீங்களாக முடிவு செய்யும் ஆற்றல் உங்களுக்கு இல்லை என்று உங்களுக்கு சிகிச்சையளிக்கும் நபர்கள் கருதினால், உங்களுக்குத் தேவைப்படும் என்று அவர்கள் நினைக்கும் சிகிச்சையை அவர்களால் உங்களுக்கு அளிக்க முடியும்.

அது ஓர் அவசரநிலையாக இல்லாதபட்சத்தில், நீங்கள் ஆட்சேபம் தெரிவிக்கும்போது, சிகிச்சையை ஏற்றுக்கொள்ளும்படி அவர்களால் உங்களைக் கட்டாயப்படுத்த முடியாது.

உங்கள் மனநலக் குறைபாடு காரணமாக, பின்வரும் நான்கு செயல்களில் ஒன்றையோ அல்லது அதற்கு அதிகமானதையோ உங்களால் செய்ய முடியாமல் இருப்பதையே “ஆற்றல் இல்லை” என்பது குறிக்கிறது:

- சிகிச்சை பற்றி உங்களுக்கு அளிக்கப்படும் விவரங்களை புரிந்துகொள்ளுதல்
- முடிவெடுக்கக்கூடிய வகையில் போதிய கால அவகாசத்திற்கு அவ்விவரங்களை நினைவில் வைத்திருத்தல்
- முடிவெடுப்பதற்கு ஏதுவாக உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விவரங்களை சீர்தூக்கிப் பார்த்தல்
- பேச்சு, சைகை மொழி, அல்லது கண் சிமிட்டல் அல்லது கையை அழுத்துவது போன்ற எளிய அசைவுகள் ஆகியவை மூலம் ஏதேனும் ஒரு வகையில் உங்கள் முடிவை தெரிவித்தல்

அது ஓர் அவசரநிலையாக இல்லாதபட்சத்தில், மன ஆற்றல் சட்டம் 2005ன் கீழ், மறுப்பதற்கான சட்டரீதியாக கட்டுப்படுத்தக்கூடிய முன்கூட்டியே முடிவெடுத்தலை நீங்கள் மேற்கொண்டிருந்தாலோ, அல்லது இச்சட்டத்தின் கீழ் உங்கள் சார்பாக முடிவெடுப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படக்கூடாது என்று கூறினாலோ, உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட முடியாது. இது, நீண்ட காலத்திற்கு சட்டரீதியாக நீங்கள் அதிகாரம் அளித்துள்ள யாரேனும் ஒருவராகவோ, பாதுகாப்பிற்கான நீதிமன்றத்தால் உங்களுக்குக்காக அமர்த்தப்பட்டுள்ள ஓர் அலுவலராகவோ, அல்லது பாதுகாப்பு நீதிமன்றமாகவே கூட இருக்கலாம். மன ஆற்றல் சட்டம் 2005 பற்றி மருத்துவமனை பணியாளர்களால் உங்களுக்கு கூடுதல் விவரங்களை அளிக்க முடியும்.

## மருத்துவம் மற்றும் மருந்துகளுடனான சிகிச்சை குறித்த சிறப்பு விதிகள்

ஒரு மாதத்திற்கும் அதிகமாக நீங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையைப் பெற்று வந்தால், மருத்துவம் மற்றும் மருந்துகளுடனான சிகிச்சை குறித்த சில சிறப்பு விதிகள் பொருந்தும்.

உங்கள் மனநல குறைபாட்டிற்கு நீங்கள் மருந்துகள் அடிப்படையிலான சிகிச்சையைப் பெற்றுவந்தால், மற்றும் நீங்கள் மருத்துவமனையில் இருக்கும் காலத்தில் அல்லது மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையைப் பெற்றுவரும்போது, முதன்முதலில் இவ்வகையான சிகிச்சை பெற்றதிலிருந்து மூன்று மாதங்களுக்கும் அதிகமாக ஆகியிருந்தால், உங்களைப் பரிசோதிப்பதற்கு ஒரு தனி மருத்துவரை (உங்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனையுடன் தொடர்பு இல்லாதவர்) உங்களைப் பரிசோதிக்க அனுமதிக்கும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவீர்கள்.

இந்தத் தனி மருத்துவர் SOAD (இரண்டாவது கருத்திற்காக அமர்த்தப்பட்ட மருத்துவர்) என்று அழைக்கப்படுவார் மற்றும் அவர் மன நலச் சட்டம் எவ்வாறு அமல்படுத்தப்படுகிறது என்பதைக் கண்காணிக்கும் ஒரு தனிப்பட்ட குழுவினால் அமர்த்தப்பட்டவராவார்.

இந்த மருத்துவர், சிகிச்சை உங்களுக்கு பொருத்தமானதுதானா என்பதை சரிபார்த்துவிட்டு, உங்களுக்கு என்ன சிகிச்சை தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்வதற்கு முன்னதாக உங்களிடம் பேசுவார்.

அது ஓர் அவசரநிலையாக இல்லாதபட்சத்தில், உங்களுக்கு பொருத்தமானது என்று இந்தத் தனி மருத்துவர் கூறும் மருத்துவம் அல்லது மருந்துகளுடனான சிகிச்சை மட்டுமே உங்களுக்கு அளிக்கப்படலாம்.

இந்தத் தனி மருத்துவர் எப்போது மற்றும் எங்கு உங்களைப் பரிசோதனை செய்ய விரும்புகிறார் என்பது உங்களுக்கு தெரிவிக்கப்படும். தனி மருத்துவரை சந்திப்பது என்பது மேற்பார்வையுடன் கூடிய சமுதாய சிகிச்சையின் விதிமுறைகளில் ஒன்றாகும். உங்களிடம் கூறப்படும் நேரம் மற்றும் இடத்தில் இந்தத் தனி மருத்துவரை நீங்கள் பார்க்காவிட்டால், இந்தத் தனி மருத்துவரைக் காண்பதற்காக, உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவர் உங்களை மருத்துவமனைக்கு திரும்ப வரும்படி அழைக்கக்கூடும்.

எலக்ட்ரோ-கன்வல்ஸிவ் தெரபி (ECT) போன்ற சில சிறப்பு சிகிச்சைகளுக்கு பல்வேறு விதமான விதிகள் உள்ளன. இந்த சிறப்பு சிகிச்சைகளில் ஒன்று உங்களுக்குத் தேவைப்படுகிறது என்று உங்களுக்கு சிகிச்சையளிக்கும் நபர்கள் கருதினால், அதன் விதிகள் உங்களுக்கு விளக்கிக் கூறப்படும்.

## மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையை நான் எவ்வளவு காலம் பெறவேண்டும்?

உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவர் அது இனிமேலும் உங்களுக்குத் தேவைப்படாது என்று முடிவு செய்யும்வரை உங்கள் சமுதாய சிகிச்சைக்கான உத்தரவு முதலில் ஆறு மாதங்கள் வரை நீடிக்கும்.

மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையில் நீங்கள் தொடர்ந்து இருக்க வேண்டுமா என்பதை அறிவதற்காக, ஆறு மாதங்கள் முடிவுறும் சமயத்தில் உங்களைப் பரிசோதனை செய்வதற்கு உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவரை அனுமதிக்கும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவீர்கள். உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவர் எப்போது மற்றும் எங்கு உங்களைப் பரிசோதனை செய்ய விரும்புகிறார் என்பது உங்களுக்கு தெரிவிக்கப்படும்.

இந்தப் பரிசோதனைக்காக, உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவரை சந்திப்பது என்பது மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையின் விதிமுறைகளில் ஒன்றாகும். உங்களிடம் கூறப்படும் நேரம் மற்றும் இடத்தில் உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவரை நீங்கள் பார்க்காவிட்டால், உங்களைப் பரிசோதிப்பதற்காக, உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவர் உங்களை மருத்துவமனைக்கு திரும்ப வரும்படி அழைக்க வேண்டியிருக்கும்.

நீங்கள் இன்னும் தொடர்ந்து மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையில் இருக்க வேண்டும் என்று உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவர் கருதுவாரானால், இன்னொரு ஆறு மாதங்களுக்கும், அதன் பின்னர் ஒரே நேரத்தில் ஓராண்டு காலத்திற்கும் அதனை அவர் நீட்டிக்கக்கூடும். ஒவ்வொரு காலகட்டத்தின் முடிவிலும் உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவர் இது குறித்து உங்களிடம் பேசுவார்.

## என்னால் மேல் முறையீடு செய்ய முடியுமா?

ஆம். உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவமனை மேலாளர்களிடம் உங்களுக்கு அளிக்கப்படும் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையை முடிவுக்குக் கொண்டுவரும்படி நீங்கள் கேட்கலாம். இதை நீங்கள் எந்த நேரத்திலும் செய்யலாம். இந்த மருத்துவமனை மேலாளர்கள், குறிப்பிட்ட நபர்களுக்கு மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமா என்பதை முடிவு செய்வதற்காக மருத்துவமனைக்குள் அமைக்கப்பட்ட, சில நபர்கள் அடங்கிய ஒரு சிறப்புக் குழுவைச் சேர்ந்தவர்கள்.

உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவமனை என்பது, பொதுவாக நீங்கள் மேற்பார்வையுடன் கூடிய சமுதாய சிகிச்சையை பெறுவதற்கு முன்னதாக இருந்த மருத்துவமனையை குறிப்பதாகும். உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவமனை மாற்றப்பட்டால், அது உங்களுக்கு தெரிவிக்கப்படும்.

மருத்துவமனை மேலாளர்கள் உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அவர்களுக்கு பின்வரும் முகவரிக்கு நீங்கள் எழுதலாம்:

| |
|---|
| |

உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையை முடிவுக்குக் கொண்டுவரலாமா என்பதை முடிவு செய்வதற்குமுன் மருத்துவமனை மேலாளர்கள உங்களிடம் பேச விரும்பலாம்.

உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையை முடிவுக்குக் கொண்டுவரப்படுவதை தாங்கள் விரும்புவதாகக் குறிப்பிட்டு உங்கள் நெருங்கிய உறவினர் கூட மருத்துவமனை மேலாளர்களுக்கு எழுதலாம். உங்களுடைய மிக நெருங்கிய உறவினர் யார் என்பதையும் இச்சிற்றேடு மேலும் விளக்குகிறது.

இதை உங்கள் நெருங்கிய உறவினர் செய்வாரானால், உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையை நீங்கள் நிறுத்திவிட்டால், உங்களுக்கும் மற்றவர்களுக்கு நீங்கள் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்று உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவர் மருத்துவமனை மேலாளர்களிடம் கூறியிருந்தாலன்றி 72 மணி நேரத்திற்குப்பின் உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை முடிவுக்குக் கொண்டுவரப்படும். இது நடந்தால், இன்னொரு ஆறு மாதங்களுக்கு பின்னரே மீண்டும் உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை முடிக்கப்படுவதை தாங்கள் விரும்புவதாக உங்கள் நெருங்கிய உறவினர்கள் மருத்துவமனை மேலாளர்களிடம் கேட்டுக்கொள்ள முடியும்.

உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை முடிக்கப்பட வேண்டும் என்று கூறும்படி நீங்கள் ஒரு தீர்ப்பாயத்தையும் கேட்டுக்கொள்ளலாம்.

## தீர்ப்பாயம் என்றால் என்ன மற்றும் என்ன நடக்கும்?

தீர்ப்பாயம் என்பது, உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை முடிக்கப்படலாமா என்பதை முடிவு செய்யக்கூடிய ஒரு தனிக் குழுவாகும். அது உங்களுடனும், நீங்கள் அறிந்துள்ள மருத்துவமனை பணியாளர்களுடனும் ஒரு சந்திப்பை மேற்கொள்ளும். இந்த சந்திப்பு “விசாரணை” என்று அழைக்கப்படுகிறது. இந்த சந்திப்பு “விசாரணை” என்று அழைக்கப்படுகிறது. நீங்கள் விரும்பினால், உங்களுக்கு உதவுவதற்காக உங்களுடன் வரும்படி யாரையேனும் நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். விசாரணைக்குமுன், தீர்ப்பாயத்தின் உறுப்பினர்கள் உங்களைப் பற்றியும் உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை பற்றியும் மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளைப் படிப்பார்கள். தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களில் ஒருவர் உங்களிடம் பேசுவதற்காக வருவார்.

## நான் எப்போது தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பிக்கலாம்?

உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சையின் முதல் ஆறு மாதங்களில், எந்த நேரத்திலும் ஒருமுறை நீங்கள் தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பிக்கலாம். அதன்பின் இரண்டாவது ஆறு மாதங்களில் ஒருமுறை நீங்கள் விண்ணப்பிக்கலாம் மற்றும் அதன்பின், நீங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை பெறும் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒருமுறை நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை முடிவுக்குக் கொண்டுவரப்படுவதை தாங்கள் விரும்புவதாக மருத்துவமனை மேலாளர்களிடம் உங்கள் நெருங்கிய உறவினர் கூறியுள்ள நிலையில், உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவர் அது முடிவுக்குக் கொண்டுவரப்படக்கூடாது என்று கூறினால், உங்கள் நெருங்கிய உறவினர் கூட தீர்ப்பாயத்திற்கு மனு அளிக்கலாம். உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை முடிவுக்குக் கொண்டுவரப்படக்கூடாது என்று தான் நினைப்பதாக உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவர் கூறியதிலிருந்து 28 நாட்களுக்குள் உங்கள் நெருங்கிய உறவினர் இதைச் செய்ய வேண்டும்.

நீங்கள் தீர்ப்பாயத்திற்கு மனு செய்ய விரும்பினால், பினவரும் முகவரிக்கு எழுதலாம்:

தி ட்ரிப்யூனல்ஸ் சர்வீஸ்
பிஓ பாக்ஸ் 8793
5வது ∴ப்ளோர்
லீசெஸ்டர்
LE1 8BN தொ.பே. 0300 123 2201

உங்கள் சார்பாக தீர்ப்பாயத்திற்கு எழுதவும், விசாரணையின்போது உங்களுக்கு உதவவும் ஒரு வழக்கறிஞரை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். இதில் சிறந்து விளங்கும் வழக்கறிஞர்களின் பட்டியல் ஒன்றை உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவமனையும் சட்ட சங்கமும் வைத்துள்ளன. இதற்காக வழக்கறிஞர் அளிக்கும் உதவிக்காக நீங்கள் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. சட்ட உதவித் திட்டத்தின் கீழ் இச்சேவை இலவசமாக வழங்கப்படுகிறது.

## உங்கள் நெருங்கிய உறவினருக்குத் தெரிவித்தல்

உங்கள் நெருங்கிய உறவினர் என்று மன நலச் சட்டம் கூறும் நபருக்கு இச்சிற்றேட்டின் பிரதி ஒன்று அளிக்கப்படும்.

உங்கள் நெருங்கிய உறவினராகக் கருதப்படும் நபர்களின் பட்டியல் ஒன்று மன நலச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளது. பொதுவாக, அந்தப் பட்டியலில் மிக உயர்ந்த இடத்திலுள்ள நபரே உங்கள் மிக நெருங்கிய உறவினராகக் கருதப்படுவார். இதனையும், உங்கள் பராமரிப்பு மற்றும் சிகிச்சை தொடர்பாக உங்கனள் நெருங்கிய உறவினருக்கு என்ன உரிமைகள் உள்ளன என்பதையும் விளக்கும் சிற்றேடு ஒன்றை மருத்துவமனை பணியாளர்களால் உங்களுக்கு அளிக்க முடியும்.

உங்கள் விஷயத்தில், எங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள உங்கள் நெருங்கிய உறவினர்:

| |
|---|
| |

இந்நபர் சிற்றேட்டின் பிரதி ஒன்றைப் பெறுவதை நீங்கள் விரும்பவில்லை என்றால், தயவுசெய்து உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவர், வேறொரு பணியாளர் அல்லது இச்சிற்றேட்டை உங்களிடம் அளித்த நபரிடம் கூறவும்.

## உங்கள் நெருங்கிய உறவினரை மாற்றிக் கொள்ளுதல்

உங்கள் நெருங்கிய உறவினராக இருப்பதற்கு இக்குறிப்பிட்ட நபர் பொருத்தமானவராக இல்லை என்று நீங்கள் நினைத்தால், அவருக்கு பதிலாக வேறொருவர் உங்கள் நெருங்கிய உறவினராகக் கருதப்பட வேண்டும் என்று கேட்டு நீங்கள் கவுன்டி நீதிமன்றத்திற்கு மனு செய்யலாம். இதனை விளக்கும் சிற்றேடு ஒன்றை மருத்துவமனை பணியாளர்களால் உங்களுக்கு அளிக்க முடியும்.

## நடைமுறைக்கான நெறி

மன நலச் சட்டம் பற்றி உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவர் மற்றும் உங்களுக்கு பராமரிப்பும் சிகிச்சையும் அளிப்பதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அறிவுரைகள் வழங்கும் நடைமுறைக்கான நெறி ஒன்று உள்ளது. உங்கள் பராமரிப்பு குறித்த முடிவுகளை எடுக்கும்போது, உங்கள் பராமரிப்பு குறித்த முடிவுகளை எடுக்கும்போது, இந்நெறி என்ன சொல்கிறது என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் விரும்பினால், இந்நெறியின் பிரதி ஒன்றை பார்ப்பதற்காக கேட்டுப் பெறலாம்.

## நான் எவ்வாறு புகார் அளிக்க வேண்டும்?

உங்கள் மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை தொடர்பாக உங்களுக்கு அளிக்கப்படும் பராமரிப்பு மற்றும் சிகிச்சை குறித்த எதைப் பற்றியேனும் நீங்கள் புகார் அளிக்க விரும்பினால், தயவுசெய்து பணியாளர் ஒருவரிடம் பேசவும். அவர்கள் பிரச்னையைத் தீர்க்க உதவக்கூடும். உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவமனையின் புகார் அளிக்கும் நடைமுறை குறித்தும் அவர்கள் விவரம் அளிக்கக்கூடும், உள் தீர்வு என்றழைக்கப்படும் நடைமுறையின் மூலம் உங்கள் புகாருக்கான தீர்வைப் பெறுவதற்கு அதனை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் புகார் அளிப்பதற்கு உதவக்கூடிய யாரேனும் மற்ற நபர்கள் பற்றியும் அவர்களால் உங்களுக்குக் கூறமுடியும்.

நீங்கள் ஒரு தனி கமிஷனிடம் முறையிடலாம். இந்தக் கமிஷன், மன நலச் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதையும், அது சரியான முறையில் அமல்படுத்தப்படுகிறதா மற்றும் மருத்துவமனையில் இருக்கும் காலத்திலும், மேற்பார்வையுடன்கூடிய சமுதாய சிகிச்சை பெறும்போதும் நோயாளிகள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறார்களா என்பதையும் கண்காணிக்கிறது. இக்கமிஷனை எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை விளக்கும் ஒரு சிற்றேட்டை மருத்துவமனை பணியாளர்கள் உங்களுக்கு அளிப்பார்கள்.

## மேற்கொண்டு உதவி மற்றும் தகவல்

உங்கள் பராமரிப்பு மற்றும் சிகிச்சை குறித்து நீங்கள் புரிந்து கொள்ளாதவை ஏதேனும் இருப்பின், உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவர் அல்லது பணியாளர்களில் ஒருவர் உங்களுக்கு உதவும் முயற்சியை மேற்கொள்வார். நீங்கள் புரிந்துகொள்ளாத ஏதேனும் ஒன்று இந்த சிற்றேட்டில் இருந்தாலோ அல்லது இந்த சிற்றேடு விடை தராத மற்ற ஏதேனும் கேள்விகள் உங்களுக்கு இருந்தாலோ, தயவுசெய்து அவர்களை விளக்கும்படி கேட்கவும்.

யாருக்காவது கொடுப்பதற்காக இச்சிற்றேட்டின் இன்னொரு பிரதி உங்களுக்கு தேவைப்பட்டால், தயவுசெய்து கேட்கவும்.